Soviet Assistance

* 82. *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to get Soviet financial assistance and collaboration for the expansion of Technical Education in this State; and

(*b*) if so, the details thereof?

ரஷ்ய நாட்டு நிதி

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வியை விரிவு படுத்துவதற்காக ரஷ்ய நாட்டு நிதி உதவியும் உடனுழைப்பும் பெறுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கிண்டி பொறியியல் கல்லூரியில் தொழில் நுட்பக் கல்வியை விரிவுபடுத்த சோவியத் வல்லுநர்களை பயன்படுத்திக் கொள்ளவும், ஆசிரியர்களை பயிற்சிக்காக சோவியத் யூனியனுக்கு அனுப்பவும், முதுகலைப் படிப்பு மற்றும் பி.எச்.டி. கல்வித் துறையில் ஆராய்ச்சி வசதிகளை நிறுவ அந்நாட்டிலிருந்து வேண்டிய தளவாடங்களை இறக்குமதி செய்யவும், சோவியத் யூனியன் உதவி கோரி, மத்திய அரசுக்கு இவ்வரசு கடிதம் எழுதியுள்ளது. இதுவரை எதும் உதவி கிடைக்கவில்லை.

Revision of the syllabi for the Shorthand Examinations

* 83. *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any panel has been constituted to revise the syllabi for the shorthand examinations; and

(*b*) if so, the details thereof?

1972 ஆகஸ்ட் 19]

சுருக்கெழுத்து தேர்வு பாட முறையைத் திருத்தியமைத்தல்.

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சுருக்கெழுத்து தேர்வுக்கான பாடமுறையைத் திருத்தி யமைக்கக் குழு ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பாடத்திட்டத்தை மாற்ற அமைக்கப்பட்ட குழு இன்னும் அதன் இறுதியான முடிவுகளை தெரிவிக்கவில்லை.

Playground for High Schools

* 84. *Q.*—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any rule prescribing the minimum size of playground to be attached to a High School;

(*b*) the number of High Schools in this State, that do not conform to this rule; and

(*c*) the number of High Schools which have no playground at all?

உயர்நிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டுத் திடல்.

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் .

(அ) ஓர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த விளையாட்டுத் திடலின் குறைந்த அளவுப் பரப்பினை வரையறுக்கும் விதி ஏதேனும் உள்ளதா ?

(இ) இம்மாநிலத்தில், இவ்விதியினைப் பின்பற்றாத உயர் நிலைப் பள்ளிகள் எத்தனை ?

(உ) விளையாட்டுத் திடலே இல்லாத உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை ?